# இப்பொழுதும் கூட அவர்கள் மணவாட்டியின் ஒரு பாகமாக - இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக - இருக்கிறார்கள் என்றறிவேன்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

19. இதை நான் வெளிப்படையாக கூற விரும்புகிறேன். என் தாயாரின் மறைவின் போது அவர்கள் அருகில் நின்று கொண்டு அவர்களுடைய ஆத்துமாவை தேவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமெனும் விருப்பம் எனக்கிருந்தது. ஏதோ வினோதமான ஒன்று என்னை அக்காலையில் மருத்துவமனைக்கு அனுப்பினது - என்னையும் மனைவியையும். அவர்கள் மிக மோசமான நிலையில் இருந்தார்கள். நான் அவர்களிடம் பேசின போது அவர்கள் கடைசியாக புரிந்த செயல் என் நினைவில் உள்ளது. அவர்களால் பேச முடியவில்லை. நான் அவர்களிடம், "அம்மா, நீங்கள் இன்னமும் கிறிஸ்துவில் அன்புகூர்ந்து, அவர் உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்தால், உங்கள் தலையை அசையுங்கள்" என்றேன். அவர்கள் தலையை அசைத்தார்கள். அப்பொழுது கண்ணீர் அவர்களுடைய கன்னங்களில் வழிந்தோடினது. பாதையின் முடிவிலும் அவர் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்தார். அவர்களுடைய கன்னத்தை தட்டிக் கொடுத்து. அவர்களுடைய முகத்தை என் கைகளினால் இழுத்து, அம்மா. நீங்கள் உண்மையான போர் வீரர். உங்களைக் குறித்து நான் பெருமையடைகிறேன்" என்றேன்.

20. சாத்தான் யோபுவின் நாட்களில் கூறினது போல. இப்பொழுது என்ன கூறியிருப்பான் என்று வியக்கிறேன்" என்று எண்ணினேன். உங்களுக்குத் தெரியும், தேவன் நமது ஜீவனை எடுக்க முடியாது. சாத்தான் தான் அதை செய்ய வேண்டும். நாம் சாத்தானிடம் ஒப்படைக்கப்படுகிறோம்.

21. சாத்தான் அதை அறிந்தவனாய்; அவர்களுடைய வேளை வந்து விட்டதென்றும், அவர்கள் போக வேண்டுமென்றும் அறிந்தவனாய், தேவனிடம், "உமக்குத் தெரியும். அவளுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் ஒரு போதகர். அவளுடைய மற்ற பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கின்றனர். அவளை சிறிது காலம் துன்புறுத்தி, அவர்கள் எல்லோரும் உம்மை மறுதலிக்கும்படி செய்கிறேன்" என்று கூறியிருப்பான்.

22. தேவனுடைய கிருபையினால் அப்படி நடக்கவில்லை. அவர்களுடைய மறைவுக்கு முன்பு அவர்கள் புரிந்த கடைசி செயல், தலையை ஆட்டி, கிறிஸ்து அவர்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கிறார் என்பதை அறிவித்ததே.

23. நான் வீடு திரும்பின போது, "நல்லது, அதுவல்லவா..." என்று எண்ணினேன். நான் உள்ளே சென்று, அறையில் உட்கார்ந்து,

வேதாகமத்தை கையிலெடுத்தேன் - ஒரு புதிய வேதாகமம். நான், “கர்த்தாவே, நீர் தேவன். நான் .... நீர் செய்யப்போவதை என்னிடம் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்களை எடுத்துக்கொள்ளப் போவதை எனக்கு நீர் மறைத்த காரணம் என் இருதயம் உடைந்து விடக்கூடாதென்றா? அப்படியானால் உமது வார்த்தையினால் என்னை ஆறுதல்படுத்தும்” என்று சொல்லி,

24. வேதாகமத்தை திறந்தேன். ஒரு வேதாகமத்தை எடுத்து அதை இப்படி திறப்பது உங்களுக்குத் தெரியும். என் விரல்களை வேதாகமத்துக்குள் நுழைத்து அதை திறந்தேன். அப்பொழுது மத்தேயு 9ம் அதிகாரம் கிடைத்தது. அதில் சிகப்பு கொட்டை எழுத்துக்களில், “இவள் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்” என்றிருந்தது. பாருங்கள், நான் பார்த்தபோது, என் கண்களில் பட்ட முதலாம் வேதவசனம்.

25. நான் வேதாகமத்தை குறி சொல்லும் பலகையைப் போல் (Ouija board) உபயோகிப்பதில்லை. அது உங்களுக்குத் தெரியும். நாம் அப்படி செய்வதில்லை. ஆனால் அந்நேரத்தில் நான் அதிக துயரமுற்றவனாய், தேவன் அதைக் காணச் செய்வார் என்று

நம்பினேன். அதைத் தொடர்ந்து கிடைத்த வேதவசனம் அது சரியென்று நிரூபித்தது.

அன்றிரவு எனக்கு உறக்கமற்ற இரவாய் இருந்தது.

26. அடுத்த நாள் காலையில் நான்..... படுக்கையை விட்டு எழுந்தேன். அப்பொழுது எட்டு மணியிருக்கும், அல்லது அதைக் காட்டிலும் நேரமாகியிருக்கும். நான் அறையிலிருந்தேன். நான் பார்த்தபோது, பிள்ளைகள் ஊனமுற்ற பிள்ளைகளை எல்லாவிடங்களிலுமிருந்து உள்ளே கொண்டு வருவதை தரிசனத்தில் கண்டேன். அது ஒரு 'நகர் பிளாக்' அகலமும், இரண்டு நகர பிளாக்' நீளமும் கொண்ட இடத்தில் ஊனமுற்ற பிள்ளைகள் உட்கார்ந்திருந்தது போன்றிருந்தது. இடது பாகத்திலும் வலது பாகத்திலும் ஜனங்கள் நெடுக உட்கார்ந்து கொண்டிருந்தனர். அது சற்று உயரமான இடம் போன்றிருந்தது. அது ஒருவிதமான அரங்கம் போல் முன்பாகத்தில் தாழ்ந்ததாகவும், பின்பாகத்திலுள்ள ஜனங்கள் முன்னால் காணத்தக்கதாக சற்று உயரமாகவும் காணப்பட்டது. நான் ஊதா 'சூட்' போட்டுக் கொண்டு அங்கு நின்று கொண்டிருந்தேன். இது என்ன விசித்திரமாயுள்ளதே! நான் வீட்டில் அறையில் நின்று கொண்டிருக்கிறதை அறிகிறேன்.

ஆனால் அங்கு ஊதா சூட்' அணிந்திருக்கின்றேனே" என்று எண்ணினேன்.

27. நான், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்னும் பாடலைப் பாடத் துவங்கி, இரு பக்கங்களிலுமுள்ளவர், "சிறு பிள்ளைகளை இயேசுவினிடம் கொண்டு வாருங்கள், அவர்களைப் பாவ உலகிலிருந்து கொண்டு வாருங்கள்" என்னும் பாடலின் மற்ற பாகத்தை பாடும்படி செய்தேன்.

28. அப்பொழுது பிரபலமான ஒரு சீமாட்டி அரங்கத்தின் பின்வாசலின் வழியாக பிரவேசித்தார்கள். அவர்கள் உள்ளே வருகிறார்கள் என்பதை நான் எப்படியோ அறிந்து கொண்டேன். அவர்கள் அங்கு கூடியிருந்தவர்களின் மத்தியில் நடந்து சென்றார்கள்.

29. நான், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்று பாட, இந்த பக்கத்திலுள்ளவர்கள், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்றும் அந்த பக்கத்திலுள்ளவர்கள், அலைந்து கொண்டிருப்பவர்களை இயேசுவினிடம் கொண்டு

வாருங்கள்' என்றும் ஒன்றன் பின் ஒன்றாக பாடிக் கொண்டிருந்தனர்.

30. நான் அங்கு கூடியிருந்த ஊனமுற்ற, வியாதிப்பட்டிருந்த சிறு பிள்ளைகளுக்காக ஜெபிக்க ஆயத்தமானேன்.

31. அந்த சீமாட்டி உள்ளே வந்து, சினிமாக் கொட்டகைகளில் உள்ளது போன்ற ஒரு தனி இடத்தில் (box)- அதாவது புகழ் வாய்ந்தவர் அல்லது ஜனாதிபதிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அப்படிப்பட்ட தனி இடத்தில் - போய் உட்கார்ந் தார்கள். நான் என்ன கூறுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நம்புகிறேன் - என் இடது பக்கத்திலுள்ள அப்படிப்பட்ட ஒரு இடத்தில்.

32. அந்த சீமாட்டி உள்ளே வந்து உட்கார்ந்தவுடன், அங்கிருந்த ஜனங்களிடம் திரும்பி தலைவணங்கி வணக்கம் தெரிவித்தார்கள். அவர்கள் பழமை நாகரீகமுள்ள உடை உடுத்தியிருந்ததை நான் கவனித்தேன். அதற்கு முன்பு, அவர்கள் தலைவணங்கி வணக்கம் தெரிவிக்க என் பக்கம் திரும்பினார்கள். நான் பிரசங்கம் செய்ய பிரசங்க பீடத்துக்கு நடந்து கொண்டிருந்தேன். அவர்கள் தலைகுனிந்திருந்த போது, நான் அவர்கள் பக்கம் இப்படி திரும்பினேன்.

33. நான் தலைநிமிர்ந்த போது, அவர்களும் என் முகத்துக்கு நேரே தலை நிமிர்ந்தார்கள். அது என் தாயார். அவர்கள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தார்கள். அவர்கள் வாலிபமாக, உண்மையில் வாலிபமாக காணப்பட்டார்கள். அப்பொழுது இடிமுழக்கம் போன்ற ஒரு பெரிய சத்தம் உண்டாகி அந்த இடத்தை அசைத்தது. அதிலிருந்து, **அவர்களைக் குறித்துக் கவலை கொள்ளாதே. அவர்கள் 1906ம் ஆண்டில் காணப்பட்டது போல் இப்பொழுது இருக்கிறார்கள்** என்னும் சொற்கள் எழுந்தன.

34. அந்த தரிசனம் என்னை விட்டு நீங்கின பிறகு, 1906ம் ஆண்டில் என்ன நடந்ததென்று நோக்கினேன். அந்த ஆண்டில் அவர்கள் என் தகப்பனாருக்கு மணவாட்டியாக அவரை விவாகம் செய்தார்கள். இப்பொழுதும் கூட அவர்கள் மணவாட்டியின் ஒரு பாகமாக - இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக - இருக்கிறார்கள் என்றறிவேன்.

*செய்தி:* **ஒரு உண்மையான சாட்சிக்காரரின் சாட்சி,** நவம்பர் 5, 1961, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★